**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**CC. No.1428/2022 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பிரியதர்ஷினி | க–பெ | ராஜா |
| ஊர்: | : | ஆலம்பட்டி | | |
| வயது: | : | 30/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026**
**எதிரி ஆஜர் .**

-----------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் ஆலம்பட்டியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். கடந்த 2021 ம் வருடம் சாக்கோட்டை காவல் நிலையத்தில் எனது கணவர் ராஜா கான்ஸ்டபிளாக பணி செய்து வந்தார். 13.06.2021 அன்று வீட்டில் இருந்து காலை 6.30 மணியளவில் எனது கணவர் Honda இருசக்கர வாகனத்தில் TN 63 AF 4287 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் கோட்டையூரில் உள்ள அருணாசலம் பள்ளிக்கு 12ம் வகுப்பு கேள்வி தாளுக்காக பாதுகாப்பு அலுவலராக கிளம்பி சென்றார். காலை 08.00–8.30 மணியளவில் எனது மாமியார் என்னிடம் செல்போனில் தொடர்பு கொண்டு ஆவுடைபொய்கை நான்கு வழி சாலையில் எனது கணவர் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது கார் ஒன்று அவர் மீது மோதி அதில் எனது கணவருக்கு தலை மற்றும் கால் ஆகிய பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டு நிகழ்விடத்திலேயே இறந்து விட்டதாகவும் சொன்னார்கள். சம்பவத்தை கேள்விபட்டு நான் காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது எனது கணவர் இறந்த நிலையில் இருந்தார். பின்னர் காவல் நிலையம் சென்று நடந்த விபரங்களை சொல்லி மேற்படி விபத்தை ஏற்படுத்திய நபர் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் அளித்தேன். **புகார் அசாஆ1.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். போலீசார் விசாரணையில் எனது கணவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய நபர் தேவக்கோட்டை சேர்ந்த விக்னேஷ் என்று தெரிந்து கொண்டேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

விபத்து தொடர்பாக இழப்பீடு பெற்று கொண்டேன் என்றால் இல்லை வழக்கு நிலுவையில் உள்ளது. புகாரை எழுதியது யார் என்றால் குன்றக்குடி போலீசார் எழுதினார்கள் நான் கையொப்பம் செய்தேன். எனது கணவருக்கு பணி காலை 8.00 மணி என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். விபத்து எப்போது நடந்ததாக நான் தெரிந்த கொண்டேன் என்றால் 8.00 –8.30 மணிவரை. எனது கணவர் காதில் ெஹட்போன் மாட்டி வண்டி ஓட்டி சென்றார் என்ற விபரம் தெரியுமா என்றால் எப்போதும் காதில் ெஹட்போன் மாட்டிருப்பார் விபத்து அன்று மாட்டிருந்தாரா என்று தெரியவில்லை. விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லும் கார்

திருச்சி – இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலை என்றாலும் அவர் ஆவுடைபொய்கை குறுக்கு சாலையில் இருந்து ரோட்டை கடக்கும் போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். சம்பவம் குறித்து நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.10 17:42:50 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.